RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s55

OPEN ACCESS

# மனித விடுதலைக்கு வித்திட்ட பெரியாரும் பெரியோரும்

யா. சாம்ராஜ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஆறுமுகம்பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி, திருப்புத்தூர்-630211, சிவகங்கை, தமிழ்நாடு, இந்தியா.

# Periyar and Prominent Figures who paved the way for Human Emancipation

Y. Samraj [a, *]

[a] Department of Tamil, Arumugam Pillai Seethai Ammal College, Tirupattur–630211, Sivagangai, Tamil Nadu, India

* Corresponding Author: ysamraj2106@gmail.com

Received: 01-08-2021
Revised: 02-04-2022
Accepted: 23-04-2022
Published: 29-05-2022

Check for updates

## ABSTRACT

Dravidam is the social movement, created by the greatest leader Periyar, that is meant as 'People Centred Movement'. This movement has sown a seed for a complete freedom from any sort of slavery. This also disseminates rationalism among the oppressions by whipping the darkness from their minds. It emancipates the hardships of women and flourishes the flower of honour, to them. By eradicating Castism, one is able to be vigilant towards equality. Man enslaved man in the guise of religion and to demolish this flith through the teaching "Love is the Source of life". Education makes a poor illiterate to become a historical important person. It is the language 'Tamil' that proves to be the base in equality argumentation when compared to all other languages. Dravidam reveals and clarifies that "Tamilans" do not depent on anyother favour to withstand. Not only rectifying the mistakes in the history, but also makes the people to have a correct view and also to get their previlges and rights, is the focus of Dravidam. Thanthai Periyar, stand as a successful leader to lead Tamilians in the correct Path. This paper focuses on the above and to bring the effects of the movement ant its followers.

**Keywords:** Dravidam, Equality, Equality Rights, Freedom.

## முன்னுரை

மனிதத்தை மீட்டெடுக்க, சாதியை வேரறுத்தல், மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல், வைதீகப் போர்வையில் குளிர்காய்ந்து கொண்டு மக்களை ஏமாற்றும் பிராமண ஆதிக்கத்தை அடியோடு அகற்றுதல், பெண்களின் உரிமைகளுக்குப் போர்க்குரல் எழுப்பி அடிமை விலங்கை உடைத்தெறிதல், சமூகச் சீர்கேடுகளுக்கு சம்மட்டியடி கொடுத்து மறுமலர்ச்சிக்கு வித்திடல், அறியாமையின் ஆணிவேரகற்றி பகுத்தறிவைத் தமிழகத்தில் தலை நிமிர்த்தி போலி புரட்டுகளைப் பொசுக்கிட, 19-ம் நூற்றாண்டின் இறுதி 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திராவிட இயக்கமென்னும் புரட்சித்தீ பரவி சமூக மாற்றம் மலர அயோத்திதாசர், இரட்டை மலை சீனிவாசன் போன்ற மூத்தோர் முன்னுக்கு நின்று சமூகம் திருத்தத் தொடங்கினர். இவர்கள் வீசிய உரிமை அனல் நெருப்பு 20-ம் நூற்றாண்டில் திசையெங்கும் படர்ந்து டி.எம்.நாயர், தியாகராசச் செட்டியார், கேசவப் பிள்ளை, நடேசமுதலியார் வழியாக இன்னும் இன்னும் பரந்து விரியத் தொடங்கியது. 1891-ம் ஆம் ஆண்டு திராவிட மகாஜன சபையை அயோக்திதாசப் பண்டிதர் தோற்றுவித்ததோடு, 'திராவிடப் பாண்டியன்' என்னும் தான் தொடங்கிய இதழில் இந்துக்களில் தீண்டத்தகாதவர்கள் குறித்து திட்டவட்டமாய் கட்டுரைகளை எழுதி மனிதனின் மதியில் சட்டென ஒட்டிக் கொள்ளச் செய்தார். இதனாலேயே திராவிட அரசியலின்

முன்னோடி என அயோத்திதாசர் அழைக்கப்படுவதோடு, அவருக்குப் பின் வந்தவர்களின் வீரியமிக்க செயல்பாடுகளில் திராவிடத்தின் தரம் எவ்வாறு தலைநிமிர்ந்து நின்றது என்பது குறித்து இக்கட்டுரை தெளிவாக விளக்குகிறது.

## திராவிடத்தின் சொத்து

'மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு' என்கின்ற அடையாளம் 1879 - செப்டம்பர் 17-ம் தேதி திருமதி. சின்னத்தாயம்மை வயிற்றிலிருந்து தரையிறங்கிய தினத்திலிருந்தே ராமசாமி எனும் குழந்தையோடு ஒட்டிப் பிறந்திருந்தது. ஆறு வயதில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படிப்பு வராவிட்டாலும், பகுத்தறிவும், பக்குவமும் பலமாய்ப் பற்றிக் கொண்டது. அப்போது கந்தபுராணம் நடத்திய பாகவதர் "முருகன் மயில் மேல் பறந்து சென்றார் என்றபோது, குறுகிட்ட ராமசாமி, முருகன் ஏறி உட்கார்ந்தால் மயில் தாங்குமா பாவேந்தரே?" என்று திகைக்க வைத்தார். அதன் தொடர்ச்சியால் உருவான பகுத்தறிவுக் கொள்ளை பார்ப்பன ஆதிக்கத்தால் தலைகுனிந்திருந்த தமிழகம், தலை நிமிர்ந்து பெரியார் இல்லாத அரசியல் இல்லை என்கின்ற நிலைக்கு உயர்ந்து கம்பீரமாய்க் காட்சி நல்குகிறது (Subramanya Sivam, 2018).

## இழிநிலை போக்கும் கருப்பு

04.04.1946 அன்று தந்தை பெரியாரால் அங்கீகரிக்கப்பட்ட திராவிடர் கழகக் கொடி, கறுப்பு செவ்வகத் துணியில் சிவப்பு வட்டத்தைக் கொண்டதாக அமைந்தது. தனது நாட்டையும், சமூகத்தையும், சூழ்ந்துள்ள துயரத்தையும் எடுத்துக்காட்ட கருப்பாகவும், துயரத்தை வென்றெடுத்து புதுப்புரட்சி பூரித்து வெளிவருகின்றது என்பதற்கான அடையாளமாக சிவப்பு வட்டமும், பொறிக்கப்பட்டதோடு நில்லாமல், தங்களின் உடையிலும் கொள்கையின் கொதிகலன் அளவுக்கதிகமாய் அணிதிரள வேண்டும் என்பதற்காக மேல்சட்டையைத் தனித்துவப்படுத்திக் கொண்டனர். அதன்படி "கருப்புச் சட்டை என்பது ஒரு படை அமைப்பின் சின்னமல்ல. அது சமூக இழிவின் அறிகுறி. இழிவிற்காக அவமானப்படுகிறோம், துக்கப்படுகிறோம் என்பதன் அடையாளம்தான் இது. இந்த இழிவினைப் போக்கிக் கொள்ள முடிவு செய்துவிட்டோம் என்பதன் அறிகுறிதான் கறுப்புச் சட்டையே தவிர வேறல்ல' என்று தந்தை பெரியார் குறிப்பிட்டுள்ளது திராவிடக் கருத்தியலில் மிக முக்கியமான ஒன்றாகும் (Ratnagiri, 1997).

## சுயமரியாதை சொல்லும் பாடம்:

தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை அம்மையார் ஈ.வெ. ராவின் தன்னலங் கருதாத, ஈடு இணையற்ற பெருந்தொண்டைக் கருதி அவருக்கு 'பெரியார்' எனச் சிறப்பு பட்டம் வழங்கிய நிலையில், அதுமுதல் பேச்சிலும், எழுத்திலும் 'பெரியார்' எனத் தொடர் முழக்கமிசைக்கவும் அவர் வகுத்த ஆறு மிக முக்கியமான கொள்கைகளே ஒவ்வொரு போராட்டத்திற்கும், ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அடிப்படையாக அமைந்திருந்தன.

- "சமூக வாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக் கூடாது.
- மனித சமூகம் பொருளாதாரத் தன்மையில் ஏழை பணக்காரன் என்ற ஏற்ற தாழ்வுகள் இல்லாமல் எல்லாப் பொருளும், பூமியும் எல்லாருக்கும் சரிசமமாக இருத்தல் வேண்டும்.
- மக்கள் சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசம் இல்லாமல் சகல துறைகளிலும் சமத்துவம் இருக்க வேண்டும்.
- மனித சமூகத்தில் சாதி, மதம், தேசம், வருணம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக ஒற்றுமையே நிலவ வேண்டும்.

- உலகில் உழைப்பாளி என்றும் முதலாளி என்றும் உயர்வு தாழ்வு இல்லாமல் சமூகத்தின் தேவைகளுக்கு, சகல மனிதர்களும் பாடுபட்டு அவற்றின் பயனைச் சரிசமமாக அனுபவிக்க வேண்டும்.
- ஒவ்வொரு மனிதனும் எவற்றுக்கும், எவ்விதத்துக்கும் அடிமையாகாமல் அவரவர் அறிவு, ஆராய்ச்சி, காட்சி, உணர்ச்சி ஆகியவைகளுக்கு இணங்கி நடக்க சர்வ சுதந்திரம் இருக்க வேண்டும்." (Ratnagiri, 1997)

என்ற கொள்கைகள் உலகத் தத்துவத்தின் உன்னதப் போக்கினை எடுத்துக்காட்டுவதாய் அமைகின்றது.

## தீண்டாமை

தொட்டால் தீட்டு, பட்டால் தீட்டு, பார்த்தால் தீட்டு, இது மனிதன் மனிதனுக்கு விதித்திருக்கும் சட்டம், மாட்டுக்கறி பிடிக்காது. மாட்டு மூத்திரம் கோமியம், தீண்டாமை ஒரு பாவச் செயல், தீண்டாமை ஒரு பெருங்குற்றம், தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல், தீண்டாமை மனிதநேயமற்ற செயல் என்று பாடப்புத்தகங்களில் விழிப்புணர்வுக்காக அச்சிடப்பட்டிருந்தாலும், நடைமுறை என்கிறபோது, மிகவும் தாழ்வுற்றுக் காணப்படுவதைப் பார்க்க முடிகின்றது.

"பள்ளென்போம் பறையென்போம்'

நாட்டா ரென்போம்!

பழிதன்னை யெண்ணாமல் வண்ணா

ரென்போம்!

பிள்ளையென்போம்! முதலியென்போம்

நாய்க்கர் என்போம்!

பிழைநாணா தருந்ததியர், படையா

ளென்போம்!

எள்ளல் செய் திழிக்கின்றோம் தாழ்விக்

கின்றோம்!

எண்ணுங்கள் நமைத் தமிழர்

என்கின் றோமா?

குள்ளமனப் பான்மையிது

தொலையு மட்டும்

கூசுங்கள் நாணுங்கள்

தமிழ்நாட் டாரே!" (Perunchithiranar, 2005)

இப்பாடல் உணர்த்தும் வலியை உற்று நோக்கும் போது மனிதப் பிறப்பு மகத்தானது. ஆனால் மதியிழந்திருக்கின்றது என்பதை உணர முடியும்.

"இறைவன் என்பது இயற்கையே யாகும்,

ஓதுவோரெல்லாம் உயர்ந்தோர் ஆகார்,

தன்மானம் இலாதவன் தமிழன் ஆகான்,

திராவிடர்க் கில்லை திதியும் திவசமும்,

தீண்டாமை என்பது வேண்டாமை யாகும்,

தெய்வத்தை நம்பித் தெருவில் நிற்காதே,

தொட்டால் தீட்டெனில் தொடாமல் விடாதே,

பகுத்தறிவாளர் பஞ்சாங்கம் பாரார்

மனிதனைக் கெடுத்தது மதமெனும் மாயை

மொட்டையும் கொட்டையும் மோட்சத்தைக் காட்டா!

வேதத்தால் வளருவது விதண்டா வாதமே!" (Vinthan, 2004)

இவையாவும் மனிதனுக்காகவே மனிதனால் எழுதப்பட்டவை இயற்கையின் படைப்பில் எல்லோரும் சமம் என்பதற்கு இதுவே சரியான உதாரணம். ஒருசாரர் மட்டும் தன்னை கடவுளின் நகல் என்று சொல்லிக் கொண்டு, பிரிதொரு சாரரை வேதனைப்படுத்திப் பார்ப்பது கொடுமையிலும் கொடுமையாகும். இக்கொடுமைகள் கண்டு பொங்கியோர் பலரிருப்பினும், ஆய்வியல் நோக்கில் அதுவும் பொய்யே என்பதை அறியலாம்.

'அரிஜன்' என்பது காந்தியின் ஏமாற்று!

'தாழ்த்தப்பட்டவன்' என்பது தன்மானமின்மை!

'தலித்' என்பது தமிழின் இழப்பு!

'பழந்தமிழன்' என்பதே சிறப்பும் பெருமையும்!

'ஆதி ஆந்திரன்' 'ஆதி கன்னடன்' 'ஆதிகேரளன்' என்று பிறர் தம்மைச் சுட்டும்பொழுது 'ஆதி(பழந்)த்தமிழன் என்பதே சிறந்தது'. (Perunchithiranar, 2005)

இவ்வுலகத்தில் மிகப்பெரிய பெரிய நூல்களைப் படித்து வெற்றி கண்டிடலாம். ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனைப் படிப்பது என்பது மிகப்பெரிய கஷ்டமாகும் என்பது இதன்வழி புலனாகிறது.

## ஆரியக் கலப்பில் படைப்பிலக்கியம்

"மதமானது நண்பர்களுக்குப் பதிலாகச் சத்துருக்களைத்தான் சிருஷ்டிக்கிறது. அடிமைத்தனத்தின் மூலமாக மோட்சத்தை அடைவது கேவலமானது" (Ingersoll, 2003) மொழி என்பது ஒரு பண்பாட்டின் அடிநாதம் எனலாம். அம்மொழி மதத்திற்குள் உட்புகுகின்றபோது அச்சமூகத்தின் நிலையானது முற்றிலும் இழிநிலையை அடைகின்றது. குறிப்பாக தமிழிலிருந்து சைவத்தையும், ஆரியத்தையும் நீக்கிவிட்டால், பழந்தமிழ் நமக்குக் கிடைத்துவிடும். இக்கோரத்திற்கு பழமைவிரும்பிகளான பண்டிதர்களே காரணமானவர்கள். சான்றாக "சிலப்பதிகாரத்தைத் தலைசிறந்த நூலென்று இன்றும் போற்றுகின்றோம். அதில் கண்ணகி மதுரை மாநகர் மீது தனது முலையைத் திருகி எறிகிறாள் கோபாவேசத்தோடு. உடனே மதுரை தீப்பற்றிக் கொள்கிறது. இதுதான் அவளுடைய கற்புக்கு எடுத்துக்காட்டு. அந்தச் சமயத்தில் அவள் 'தீ'க்கு ஆணையிடுகிறாள். 'பார்பனரை அழிக்காதே!' என்று. அவ்வகையில் கண்ணகி ஆரியப் பெண்ணாக இருப்பாளா? தமிழ்ப் பெண்ணாக இருப்பாளா? (Thanthai Periyar, 1936) என்பதை சற்றே நோக்கும் போது, சிலம்பை முத்தமிழ் காப்பியம், நாடகக் காப்பியம், என்றெல்லாம் சொன்னாலும் கூட, அங்கே எங்கேனும் ஓர் மூலையில் ஆரியக்கலப்பு சூழ்ந்து நிற்பதைக் காணமுடிகிறது.

## முடிவுரை

திராவிடக் கருத்தியலைப் பொருத்தமட்டில் மனிதவாழ்வில் அனைத்துமே 'விடுதலை' என்ற நோக்கில் செயல்படுவதாகும். எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத

நிலை வேண்டும் என்பதனை ஆணிவேராகக் கொண்டு மனிதம் போற்றலை முன்னெடுத்து நிற்பதாகும். திராவிட அரசியல் இல்லையெனில் ஆரியர்களின் ஆதிக்கம் இன்னும் மேலோங்கி இருந்திருக்கக்கூடும். 1971 - ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்னும் சட்டம் தந்தை பெரியார் தொடங்கி எத்தனையோ போராளிகளையும் கடந்து 2021-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழக முதல்வருமான மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது எனில் இதுவே திராவிடத்தின் மாண்பு எனலாம். அடிமையினை விரட்டி அனைவரும் ஒருதாய் மக்கள் என நடைமுறைப்படுத்துவதே திராவிடத்தின் உயிர் மூச்சு என்பதனை இக்கட்டுரை வழி அறியமுடிகிறது.

## References


Ingersoll, (2003) Manitha Jaathiyin Suthanthiram, Sandhya Publications, Chennai, India.

Perunchithiranar, (2015) Saathi Ozhippu, Thenmozhi Pathippagam, Chennai, India.

Ratnagiri, Ira., (2015) Thanthai Periyar Vazhvum Thondum, National Book Trust, Delhi, India.

Subramanya Sivam, (2018) Vaikom Veerar EVR Periyar, Apple Publishing International Private Limited, Chennai, India.

Thanthai Periyar, (2010) Ezhuthu Cheerthirutham, Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Vinthan, (2008) Periyar Arivu Suvadi, Vindan Foundation ‘Govindalaya’, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License